| O.S.No. 06/2025 | PW1: திருமதி. சித்ரா<br>க/பெ. திரு. ஜெகன்நாதன் | 23-02-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>1–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. எனது மகன் பெயர் அருணா, மகன் பெயர் புருஷோத்தமன். என் மகன் இறந்துவிட்டார். வேணுகோபால் மகன் ஜெயபாலன் என்பவர் என் கணவரின் அண்ணன் ஆவார். எனது முகவரி நெ.389, நடுத்தெரு, உக்கல் கிராமம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பட்டா 15.12.2023 தேதியன்றுதான் தாசில்தாரால் கோப்பு ஏற்படுத்தப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1993லிருந்து தாவா சொத்தில் குடியிருந்ததாகா எனது வழக்குரையில் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த வீடு சிமெண்ட்டால் ஆன ஓட்டு வீடு ஆகும். 1993லிருந்து அந்த வீட்டிற்கு மின் இணைப்பு இல்லை என்றால் சரிதான், ஆனால் Charger வைத்திருந்தோம். அந்த வீட்டின் முகவரிக்கு ரேஷன் கார்டு, வாக்காளர் அடையாள அட்டை இல்லை.

2. எனக்கு வாக்காளர் அடையாள அட்டை நெ.389, நடுத்தெரு, உக்கல் கிராமத்தில் உள்ளது. நடுத்தெருவில் உள்ள வீடு எனது மாமனாரினுடைய வீடு, அது பாகம் பிரிக்கப்படாமல் பிரச்சனையில் உள்ளது. எனது மாமனார் மற்றும் கணவர் இறந்துவிட்டனர். எனது மகள் திருமணமாகி தூசியில் வசிக்கிறார். எனது மருமகன் பத்திரம் எழுதும் வேலை பார்க்கிறார். எனது மருமகன் பத்திரம் எழுதும் தொழில் செய்வதால் நிலம் பற்றிய விவரங்கள் மற்றும் சட்ட அறிவும் அவருக்கு நன்கு தெரியும் சரிதான். நான் 100 நாள் வேலை திட்டத்திற்கு முதலில் சென்றிருந்தேன், தற்போது ஆஞ்சியோ செய்துள்ளதால் செல்வதில்லை. எனது வங்கி கணக்கு உக்கல் முகவரியில்தான் உள்ளது.

3. உக்கல் கிராமத்தில் சர்வே எண். 255/11-ல் 12 செண்ட் எனது பெயரிலும், எனது மகன் பெயரிலும் உள்ளது என்றால் சரிதான். அதன் பட்டா எண்.2192 ஆகும். அதேபோல் உக்கல் கிராமத்தில் சர்வே எண். 441/1C - ல் 5 செண்ட் பட்டா எண். 2049-ன் படி எனது பெயர், எனது மகன், மகள் மற்றும் எனது கணவரின் அண்ணன் ஜெயபாலன் ஆகியோர் பெயரில் கூட்டுப்பட்டாவாக உள்ளது என்றால் சரிதான், அதுதான் தற்போது பிரச்சனையாக உள்ளது. அதேபோல் உக்கல் கிராமத்தில் சர்வே எண். 441/1A - ல் 45 செண்ட் நிலம், என் பெயரிலும், எனது மகள் பெயரிலும் பட்டா எண். 1346-ன்படி கூட்டாக உள்ளது என்று சொன்னால் சரிதான், அதுவும் பிரச்சனையில் உள்ளது. அதேபோல் உக்கல் கிராமத்தில் சர்வே எண். 441/2 - ல் 24½ செண்ட் நிலம், எண். 265/10 - ல் 12½ செண்ட் நிலம், சர்வே எண். 441/3 - ல் 46 செண்ட் நிலம், சர்வே எண். 441/1B - ல் 37 செண்ட் நிலம், சர்வே எண். 636/4 - ல் 23 செண்ட் நிலம், ஆக மொத்தம் 1 ஏக்கர் 18 செண்ட் நிலம் என் பெயரிலும், எனது மகள் அருணா பெயரிலும் பட்டா எண். 2265-ன் படி கூட்டாக உள்ளது என்று சொன்னால் சரிதான், அதுவும் பிரச்சனையில் உள்ளது.

4. இலவச வீட்டு மனை ஒப்படைவு நமூனா வழங்குவதற்கு நான் தகுதியான நபர் இல்லை என்றாலும், எனக்கு ஏற்கனவே நிலங்கள் இருப்பதனால் அவ்வாறு எதுவும் எனக்கு வழங்கப்படவில்லை என்றாலும் சரியல்ல, அந்த சமயம் எனக்கு நிலங்கள் எதுவும் இல்லாமல் இருந்தது. எனது சாதி சான்றிதழினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. இலவச வீட்டு மனை ஒப்படைவானது ஆதிதிராவிடர் நலத்துறையால் ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்பட்டது என்று சொன்னால் அங்கு எல்லோரும் பொதுவாக உள்ளதால் வழங்கினார்கள்.

5. இவ்வழக்கில் ஆதிதிராவிடர் நலத்துறை தனி வட்டாட்சியரை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். தனி வட்டாட்சியரை வழக்கு தரப்பினராக சேர்த்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் அவரை நான் சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. உக்கல் கிராமம் உக்கல் பஞ்சாயத்தில் உள்ளது. கூழமந்தல் கிராமத்திற்கு தனி பஞ்சாயத்து உள்ளது. நான் உக்கல் பஞ்சாயத்தை சேர்ந்தவர். கூழமந்தல் பஞ்சாயத்தில் வசிக்கிற நிலமற்ற ஆதிதிராவிட மக்களுக்குத்தான் வழக்கு சொத்து ஒப்படைவு செய்யப்பட்டது என்றாலும், எனக்கு வழங்கப்படவில்லை என்றாலும் சரியல்ல.

6. எனது வழக்குரையில் பத்தி 5-ல் சொல்லியுள்ள வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. அந்த தேதி வழக்குரையில், பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து இலவசமாக ஒப்படைவு மூலம் எனக்கு வழங்கவில்லை என்றாலும், அந்த சொத்தானது 3-ம் பிரதிவாதி ராணி என்பவருக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டது என்றாலும் சரியல்ல. 1993-லிருந்து இதுநாள் வரை தாவா சொத்தில் நான் எந்த காலத்திலும் குடியிருந்து வந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல.

7. தாவா சொத்தில் ராணி குடியிருந்து வந்து, அதனை சட்டப்படி ராணியிடமிருந்து 1, 2 பிரதிவாதிகள் சரியான பிரதிபலனுக்கு கிரையம் வாங்கினார்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து 10, 15 வருடங்களாக காலி இடமானத்தான் இருந்து வருகிறது என்றாலும், அதில் எந்த விதமன கட்டுமானமும் இல்லை என்றாலும் சரியல்ல, அதில் நாங்கள் கட்டியுள்ள சிமெண்ட்டால் ஆன வீடு உள்ளது. அந்த இடம் காலியாக

இருப்பதை தெரிந்துதான், நான் 2023-2024 -ல் மேற்படி இடத்தில் சிறிய சுவரை கட்டி எனது பெயரில் மின் இணைப்பு பெ முயற்சி செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால், 1-ம் பிரதிவாதி இராணுவத்தில் பணி செய்வதால் ஊர்க்காரரை வைத்து நான் மின் இணைப்பு பெறுவதற்கு தடை மனு அளித்தார் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் 2023-2024 காலகட்டத்தில் என்னால் உருவாக்கப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. எனது கணவரின் குடும்ப சொத்து சம்மந்தமாக பிரச்சனை இருப்பதற்கு வழக்கு ஏதேனும் தாக்கல் செய்தீர்களா என்றால் இல்லை, அது பஞ்சாயத்தில் அப்படியே நிற்கிறது.

8. எனது கணவர் 2005-ல் விபத்தில் இறந்துவிட்டார். எனது கணவர் இறந்தபின்புதான் சொத்து தகராறு என்றால் அதற்கு முன்பிருந்தே இருந்தது. எனது கணவர் இறப்பதற்கு 10 ஆண்டுகளுக்கு முன்னர் என் மாமனார் இறந்துவிட்டார். எனக்கு 1983-ல் திருமணமானது. எனக்கு திருமணமானதிலிருந்து இன்றுவரை நான் எனது மாமனார் சொத்தில்தான் இருந்து வருகிறேன் என்றால் இல்லை. 1993-லிருந்து நான் தாவா சொத்தில் இருந்ததற்கு எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், அதற்கு காரணம் நான் தாவா சொத்தில் குடியிருக்கவில்லை என்றாலும் சரியல்ல.

9. 1-ம் பிரதிவாதி எனது பெயரில் வழங்கப்பட்ட பட்டாவினை நீக்கம் செய்யவேண்டி மாவட்ட ஆட்சியருக்கு மனு கொடுத்ததால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தால் அந்த நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்படும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனது மருமகன் வில்லங்க சொத்து குறித்து நன்கு கைதேர்ந்தவர் என்பதால் அவரை வைத்து பொய்யான இந்த வழக்கை

தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது வழக்கு காலவரையரை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும், அதனால் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.23 12:06:56 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**